அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.—(குறள்.)

"From Wisdom's vaunted lore what doth the learner gain
If as his own he guard no other's souls from pain."

TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் II.] DECEMBER, 1902-௵ டிசெம்பர். [இலக்கம். 4.

சிருஷ்டியின் இயற்கை யிரக்கமற்றதோ?

கடவுள் சிருஷ்டித்த பிரபஞ்சத்தின் இயற்கைக்கு இரக்கமென்பதில்லையோ? அல்லது அது தனது முக்கியமான பெரிய காரியத்தை முடித்துக் கொள்ளும் விஷயத்தில் எதற்கு எந்தவிதமான துன்பமாயினும் வருத்தமாயினும் உண்டானாலும், அதைப்பற்றி அத்தனையாகக் கவலைகொள்ளாமல் உபேக்ஷயா யிருக்கின்றதோ? இயற்கையில் ஸகலமான ஜந்துக்களும் உயிர் வாழ்ந்து ஜீவித்திருப்பதற்கு ஏற்பட்டிருக்கும் உபாயங்களைப் பார்த்தால், தன் காரியத்தை முடிக்கும் விஷயத்தில் உலகவியற்கை மிகக் குரூரமானதென்றும், இரக்கமில்லாததென்றுமே நினைக்கவேண்டியதாகின்றது. 'சிறு பூச்சிகள் சிறு பறவைகளுக்கு உணவாகின்றன; சிறு பறவைகள் பெரிய பறவைகளுக்கு உணவாகின்றன; சற்று நிதானித்துப் பார்க்குமிடத்தில், இவ்வுலகம் முழுமையும் கொள்ளையும் கொடுமையும் கொலையுமாகவே யிருக்கின்றது' என்று ஒரு கவிராயர் கூறியபடியே காணப்படுகின்றது. அதுவேயல்லாமல் ஈசுவரனுடைய சிருஷ்டியான இவ்வுலகத்தில் எவ்விடத்திலும் நீதியும் நேசமும் அன்பு மிரக்கமும் அமைந்திருக்கக் காணப்படவில்லையே—என்று சிலர் கேட்கிறார்கள். இந்தக் கேள்விக்கு ஏற்ற ஸமாதான மின்னதென்று இன்னு மேற்படாமலே யிருக்கின்றது.

இதற்குத் தகுந்த ஸமாதானம் இன்னதென்று தோன்றாமல், இதைப்பற்றிப் பலர் இன்னும் ஆலோசனை செய்துகொண்டே யிருக்கிறார்கள். ஆயினும், பிரகிருதி தத்துவ சாஸ்திரிகளும் மற்றும் பலரும் சொல்லிய அபிப்பிராயங்களை இதனடியில் எடுத்துத் தெரிவிக்கிறோம். இப்பத்திரிகையைப் படிப்பவர்கள் அவைகளை ஆலோசித்துப் பார்ப்பார்களானால், இந்தக் கேள்விகளுக்குச் சமாதானமின்னதென்று ஒருவாறு அவரவர்க்கே தெளிவாகலாம். ஒரு தத்துவசாஸ்திரியின் அபிப்பிராயமாவது:—

'பெரிய பிராணிகள் சிறு பிராணிகளைப் பிடித்துத் தின்னும்படி பிரகிருதியில் அமைந்திருப்பது பொல்லாத கொடுமையல்லவா? அப்பொழுது உணவாகும் சிறு ஜந்துக்களுக்கு உண்டாகும் வருத்தமும் இம்சையும் இப்படிப்பட்டவையென்று சொல்லிமுடியுமா? அது கொடிய ஜீவஹிம்சை யல்லவா என்று பலர் கேட்பார்கள். ஆம், அது உண்மைதான்; ஆயினும், தன்னைப் பெரிய ஜந்து பிடித்துத் தின்னுகையில், சிறிய ஜந்துவுக்கு உண்டாகும் துன்ப மெவ்வளவென்பதை நாம் நமது புத்தியைக்கொண்டு சற்று ஆலோசித்துப் பார்க்கவேண்டும். நன்றாய் ஆலோசிக்குமிடத்தில், அதற்கு ஹிம்ஸை எவ்வளவு அதிகமென்று பார்ப்பவர் நினைப்பார்களோ, அவ்வளவு ஹிம்ஸை ஒருபோதும் உண்டாவதில்லையென்று உறுதியாகச் சொல்லலாம். ஏனென்றால், அப்படிப்பட்ட அபாயம் நமக்குச் சம்பவிக்குமானால், நாம் எவ்வளவு துடித்துத் தவிப்போமோ அவ்வளவு ஸங்கடம் அற்ப ஜந்துக்களுக்கு ஒருபோதும் தோன்றாதல்லவா? வரப்போகிற அபாய மிப்படிப்பட்டதெ

ன்று, பெரிய பிராணி கையில் பிடிபடுகிறவனாயில் அதற்குத் தெரியாதாகையால், அந்த நிமிஷமளவும் அது ஆநந்தமாகவே யிருக்கிறது; உயிர் என்றைக் காவது ஒருநாள் ஒழியவேண்டியதுதானே; பகை யான ஜந்து வந்து பிடித்துக்கொண்டவுடனே பிரா ணனும் பிரயாஸமில்லாமல் ஒரு க்ஷணத்தில் போய் விடுகிறது பரம சுகமல்லவா?' என்று சொல்லு கிறார்.

மற்றொரு பண்டிதர் சொல்வதாவது:—

'பெரிய ஜந்துக்கள் வந்து பிடித்துக்கொள்ளும் போது, சிறிய ஜந்துக்கள் தம் பிராணனைப் பாது காத்துக்கொள்வதற்குப்படுகிறபிரயாசையும், அதனா லுண்டாகும் ஹிம்ஸையும் மிகவும் அதிகமானவை யென்று மனிதர் நினைப்பதெல்லாம், தமக்கு அப்ப டிப்பட்ட துன்பம் நேரிட்டால் எப்படியிருக்கு மென்பதை நினைத்துப் பார்த்தேயன்றி மற்றப்படி யன்று. அற்பப் பிராணிகள் அப்படி மற்றொன் றுக்கு இரையாவதனால் அவற்றிற்கு ஒருவிதமான உபத்திரவமும் ஹிம்ஸையும் தோன்றுவதில்லை' என்று எழுதியிருக்கிறார்.

சிறு பறவை முதலியவைகளின் செய்தி இப் படியானாலும், மிகப் பெரிய கொடிய விலங்குக ளான புலி, கரடி முதலியவைகள் மான்முதலிய வைகளை யெதிர்த்தால், அவைகள் பிராணனைப் பாதுகாத்துக்கொள்ளத் தவித்துத் துடிக்குமன்றோ? அந்த ஹிம்ஸை இப்படிப்பட்டதென்று மனத்தி னாலும் நினைக்கக்கூடுமோ? இதனால் இயற்கை இரக்கமற்றதென்று சொல்லவேண்டாமா? என்று அநேகர் கேட்கலாம். ஆம்; அது உண்மையே; அதற்கும் ஒரு புலவர் எற்ற ஸமாதானம் சொல்லு கிறார். புலி, சிறுத்தை, கரடி முதலான கொடிய விலங்குகளின் கையில் அகப்பட்டுப் பிராண னோடு தப்பித்துக்கொண்டுவந்த சில மனிதர்களு டைய அபிப்பிராயத்தையே இவர் இதற்குத் திரு ஷ்டாந்தமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். அதா வது; அப்படிப் புலியின் கையில் அகப்பட்ட ஒருவர் சொல்லுவதாவது: 'நான் ஒரு சமயத்தில் காட்டினிடையே போனபோது ஒரு புலி என் னைப் பிடித்துக்கொண்டது; அது என்மேல் பாய்ந்து பிடித்து அறைந்தபொழுதும் எனக்குச் சிறிதும் இம்ஸைபாயினும் பயமாயினும் தோன் றவில்லை; ஆனாலும் அது என்னைக் கடித்துத் துன்பப்படுத்துவதெல்லாம் எனக்கு நன்றாய்த் தெரிந்துகொண்டேயிருந்தது' என்கிறார்.

பங்காளத்துப் புலியினிடம் அகப்பட்டு ஒரு கையை யிழந்துபோன பாதிரி யொருவர் சொல்வ தாவது: 'புலியினால் என் கையில் காயம்பட்டு அதனால் பிறகு அந்தக் கை உபயோகமில்லாமல் அதை அடியோடு எடுத்துவிடும்படியாக நேரிட் டது. அப்பொழுதும் கையில்பட்ட காயத்தினால் உண்டான நோவுதவிர மற்றெந்தவிதமான வருத்த மாவது பயமாவது ஹிம்ஸையாவது எனக்குத் தோன்றவில்லை' என்பதாம்.

அப்படியே மற்றொருவர் சிறுத்தையினிடம் தாம் அகப்பட்டுக்கொண்டதாகவும், தானும் அதுவும் கட்டிக்கொண்டு கீழே புரண்டதாகவும் சொல்லு கிறார். அந்தச் சமையத்தில் தன்னைச் சிறுத்தை யுடன் யாராவது சுட்டுப்போடுவார்களோவென் கிற பயமுண்டாயிற்றே தவிர, அந்தச் சிறுத்தை யினிடம் தனக்கு அச்சமாவது இம்சையாவது தோன்றவில்லையென்றும் கூறியிருக்கிறார்.

ஆகையால் ஆலோசித்துப்பார்க்குமளவில், இப் படி இரையாகும் பிராணிகள் அநேகமாகப் பயங் காளிகளேயாதலால், கொடிய மிருகங்கள் வந்து திடீரென்று பிடித்துக்கொண்டவுடனே அவை ஒன்றும் தோன்றாமல் பிரமை பிடித்துப்போ கின்றன; அப்பொழுது ஒருவிதமான இம்ஸை யும் தோற்றுவதில்லை; அப்படியே மெய்மறந்து மறுநிமிஷத்தில் சுகமா யுயிரை இழக்கின்றன. ஆகையால் 'ஆறிலும் சாவு நூறிலும் சாவு' என்ற படி, பிறந்தவைகளெல்லாம் என்றைக்காயினும் ஒருநாள் இறக்கவேண்டுவது அவசியமானதுபற்றி, பரம காருணிகனான ஸர்வேச்வரன் அநாதைகளான எளிய ஜந்துக்களுக்கு அநாயாஸமாக மரணமுண் டாகும்படி எற்படுத்திய உபாயங்களில் இது முக் கியமான ஒன்றேதவிர வேறன்று. இதையறிந்து உலகவியற்கையில் கொடுமையென்பது ஒருபோ தும் கிடையாதென்று, புலவர்கள் பலர் கடவுளு டைய காருணியத்தைப் புகழ்ந்து பேசுகிறார்கள்.

உபாத்தியாயர்களுக்கு ஒரு மொழி.

ஜந்து வர்த்தமான ஸாரமென்கிற இத்தமிழ்ப் பத்திரிகையில் எழுதப்பட்டுவருகிற விஷயங்கள் பற்பல பாடசாலை உபாத்தியாயர்களாலும் மாணாக் கர்களாலும் எவ்விதமாக நன்குமதிக்கப்படுகின் றனவெனத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றும், பிள்ளைகளுக்கு வேறு பல விஷயங்களைக் கற்பிப்ப தோடுகூட ஜீவகாருணியத்தை விருத்திசெய்யும் படியான பாடங்களையும் கற்பிக்க உபாத்தியாயர் தம்மாலான உதவிசெய்யவேண்டுமென்றும், இந் தப் பத்திராதிபர் மிகுந்த ஆவல்கொண்டிருக்கிறார். இந்த ஜந்து வர்த்தமான ஸாரப் பத்திரிகையை வாங் கிப் படிக்கும் உபாத்தியாயர்கள், இதைப்பற்றித் தங்களுடைய அபிப்பிராய மின்னதென்பதையும், இப்படி ஜீவகாருணியமுண்டாக்கும் விஷயத்தில் தாங்கள் செய்கிற காரிய மின்னதென்பதையும் அறிவிப்பார்களானால், அது இப்பத்திராதிபருக்கு மேன்மேலும் அதிகமான உற்சாகத்தை உண்டாக் கும்; மற்ற உபாத்தியாயர்களுக்கும் அது ஒத்தா சையாகும்.

இதேவிஷயத்தைப்பற்றி அமெரிக்கா தேசத்துப் பத்திரிகையொன்றில் ஒரு விஷயம் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது; அது உபாத்தியாயர்கள் பலருக்கும், இந்த ஜந்து வர்த்தமான ஸாரத்தைப் படிப்பவர்களுக்கும், படிக்கப் பிரியமாயிருக்குமென்று அதை இதனடியில் எழுதுகிறோம்:—

'பெண்பிள்ளை பாடசாலை உபாத்தியாயி ஒருத்தியுடனே நான் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, பெண்பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் மற்றப் பாடங்களுடன் ஜீவகாருணிய விஷயமான பாடத்தையும் பாடசாலையில் கையாளவேண்டுமென்று நான் எடுத்துத் தெரிவித்தேன்; அது அவளுக்குத் தலையில் ஒரு பெரிய மூட்டையைத் தூக்கிவைப்பது போல் இருந்ததாகத் தோன்றியது; ஏனென்றால், என் அபிப்பிராயத்தை அவள் அறிந்துகொள்ளவில்லை. என் அபிப்பிராயமென்னவென்றால், உபாத்தியாயர்களுக்குப் பசு பக்ஷி மிருகம் முதலியவைகளிடத்தில் அபிமானமிருக்குமானால், அவர்கள், ஜீவகாருணியவிஷயமான பாடங்களையும் பாடசாலையில் பிள்ளைகளுக்குப் போதித்து விசேஷமான நன்மை செய்யலாம். அப்படியே ஒரு உபாத்தியாயர் மற்றப் படிப்புகளுக்கு விரோதமில்லாமலே ஒழிவுகாலத்தில் தம் பிள்ளைகளுக்கு ஜீவகாருணிய பாடங்களைப் பலவருஷகாலம் போதித்துக்கொண்டிருந்ததை நான் அறிவேன்; அப்படியே அந்தப் பிள்ளைகளும் உயிர்களிடத்தில் அன்பும் இரக்கமுமுள்ளவர்களானார்கள்: ஆண்பிள்ளைகள் சிறு ஜந்துக்களைப் பிடித்து இம்ஸிப்பது, அவற்றின்மேல் கல்லெடுத்தெறிவது முதலான கொடுமைகள் செய்வதைக் கைவிட்டார்கள்; பெண்பிள்ளைகள், தாம் வீட்டில் வளர்க்கும் நாய் பூனை முதலாகிய அருமையான ஜந்துக்களுக்கு உணவளித்து ஆதரிக்கத் தலைப்பட்டார்கள். சிறுவர்களுக்கு இப்படிப்பட்ட ஜீவகாருணியம் இளமைப்பருவத்திலேயே பழகுமானால், அவர்கள் தம் குடும்பத்திலும், உற்றாருறவினர்களிடத்திலும் சீராக நடந்து ஒருவருக்கும் பொல்லாதவராகாமல் நல்ல பிள்ளைகளென்று பேரெடுப்பார்கள். அன்பான குணம் அளவில்லா நிதியல்லவா?

பாடசாலைகளில் பிள்ளைகளுக்குக் கதைகள் படித்துச் சொல்ல எல்லா உபாத்தியாயர்களுக்கும் போதுமான அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறதல்லவா? அந்தக் காலத்தில் வாரத்திலிரண்டொரு நாள் ஜீவகாருணியத்தைப்போதிக்கிற கதையையே பாடமாகக்கொண்டு படித்துக்காட்டினால், மிகவும் நலமாயிருக்கும். பாஷை கற்கவும் பிள்ளைகள் வாசகபாடம் படிக்கிறார்களல்லவா? இந்தப் பத்திரிகையில் மாதந்தோறும் பிரசுரமாகிவருகிற சிற்சில விஷயங்களை அப்படிப்பட்ட பாடங்களாகவும் கொள்ளலாமே. அல்லது பிள்ளைகள் வாக்கியமெழுதப் பழகும் பாடத்தில், ஜீவகாருணிய விஷயமான கதைகள் எழுதும்படி பழக்கலாம். இப்படிப் பலவிதமான வழியில் ஜீவகாருணியத்தைப்பற்றின பாடங்கள் பிள்ளைகளுடைய புத்தியில் பதியும்படி செய்யலாம். ஜீவகாருணியத்தைக்கற்பிக்கவேண்டுமென்கிறகருத்து உபாத்தியாயர்களுக்கு இருக்குமானால், அதை ஆசாரத்திற்குக் கொண்டுவர அநேகம் தருணங்கள் தாமே கிடைக்கும்.

ஒரு ஆணியில்லாத குற்றம்.

ஒரு பெரிய வியாபாரி 'வணிகர்க்சழகு வாணிபஞ் செய்தல்' என்றபடி ஒரு சந்தைக்கு அளவற்ற சரக்குகள் விற்கக் கொண்டுபோயினான். அங்கே நல்ல வியாபாரம் நடந்து அவனுடைய சரக்குகளெல்லாம் விற்பனையாயின. அவன் பை நிரம்பப் பொன் வெள்ளி நாணயங்கள் நிறைந்து போயின. பிறகு அவன் பொழுதுபோவதற்குள்ளே தன் ஊர் போய்ச் சேரவேண்டுமென்று தன் பணப்பையைப் பிரயாணப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டிக்கொண்டு அதைச் சேணத்தின் கீழே வைத்துக் குதிரைமேலேறிப் பிரயாணப்பட்டான்.

அன்றையதினம் பகல் வெயிலுக்கு அவன் நடுவழியில் ஒரு ஊரிலே நின்றான். அவ்விடம் விட்டு அவன் புறப்படப்போகிற தருணத்தில், குதிரைக்காரன் குதிரையை ஓட்டிக்கொண்டுவந்து, 'ஐயா! இக்குதிரைக்கு இடது பின்னங்கால் லாடத்தில் ஒரு ஆணி விழுந்துபோயிருக்கிறது' என்று சொன்னான். யஜமானனும் அதை உற்றுப்பார்த்து, 'ஆம், அப்படித்தான் இருக்கிறது; ஆனாலும், ஊர் இன்னும் 4 மைல் தூரந்தானே யிருக்கிறது; அதுவரையில் லாடம் விழுந்துபோகாமல் அப்படியே நிற்கும்; எனக்கு அவசரமாகப் போகவேண்டியிருக்கிறது' என்று சொல்லி அப்படியே குதிரைமேல் ஏறிக்கொண்டு போனான்.

பிறகு அந்த வியாபாரி சாயங்காலம் மறுபடி குதிரைக்குக் கொஞ்சம் தீனிபோடும்படி மற்றோரிடத்தி லிறங்கினான். அப்பொழுது குதிரைக்காரன் குதிரைக்காலைப் பார்த்து யஜமானனை நோக்கி, 'ஐயா, தங்கள் குதிரையின் இடது பின்னங்கால் லாடம் வழியிலே விழுந்துபோய்விட்டது; குதிரைக்கால் லாடமில்லாமலே யிருக்கிறது; கருமான்கடைக்கு ஓட்டிக்கொண்டுபோய் லாடமடித்துக்கொண்டு வரலாமா?' என்றான். அதற்கு அந்த யஜமானன், 'இன்னும் இரண்டுமைல் தூரம் தானே போகவேண்டும்; குதிரை முன்போலவே நடக்கும்; எனக்கு அவசரமாகப் போகவேண்டிய காரியமிருக்கிறது' என்றான்.

அப்படிச் சொல்லி உடனே அவன் குதிரை மேலேறிக்கொண்டு பிரயாணப்பட்டான். சிறிது

தூரம் போவதற்குள் குதிரை நடக்கமாட்டாமல் கால்நொண்ட ஆரம்பித்தது; நொண்டிக்கொண்டே கொஞ்சம் தூரம் போய், காலிடறத் தொடங்கிற்று. அப்படியேயானாலும் அது மெல்ல மெல்ல ஊர் போய்ச் சேர்ந்ததோ, இல்லை; நடுவழியில் கால்மடிந்து கீழே விழுந்தது. அதனால் அவன் குதிரையை அங்கேயே விட்டுவிட்டுத் தன் பெட்டியிலடங்கிய மூட்டையைத் தலைமேல் தூக்கிக்கொண்டு கால்நடையாய்ப் போகவேண்டியதாயிற்று. ஊர் போய்ச் சேர இராத்திரி வெகுநேரமாகிவிட்டது. கள்ளர் கையில் பணத்தைப் பறிகொடாமல் தப்பினது அவன் அதிர்ஷ்டமே. அவன் பட்டபாட்டை எண்ணி யெண்ணி 'ஆ! அந்த ஒரு ஆணியை அலக்ஷியமாக எண்ணி உபேக்ஷை செய்ததனாலல்லவா இவ்வளவு துன்பம் நேரிட்டது!' என்று தன் குற்றத்தை நினைத்து விசனப்பட்டான்.

பட்சிகளுக்கு ஒரு நல்ல செய்தி.

லண்டன் மாநகரத்தில் பக்ஷி ரக்ஷண சங்கத்தார் புலங்களிலும் தோட்டங்களிலும் உள்ள பறவைகளுடைய போஷணவிஷயமாயும் அவைகளால் மனிதருக்கு கிடைக்கும் நன்மைகளைப்பற்றியும் சிறந்த உபந்நியாசங்களை எழுதியனுப்புகிறவர்களுக்கு முதல் வெகுமதி 10 ஸவரனும், 2-ம் வெகுமதி 5 ஸவரனுமாகப் பரிசுகொடுக்கும்படி தீர்மானித்திருக்கிறார்களாம். இது மிகவும் நல்ல ஆலோசனைதான். பக்ஷிகளால் உபயோகமொன்றுமில்லை யென்று பிதற்றி அவைகளைத் துன்பப்படுத்துகிறவர்களுக்கு நற்புத்தி போதிக்க இது ஒரு சிறந்த உபாயமே.

மிருகங்கள் ஒன்றுக்கொன்று காட்டிய அன்பு.

யானைகள் அடர்ந்த காட்டிற்குச் சமீபத்தில் இருந்த ஒரு கிராமத்தில் அந்தக் காட்டுயானைகள் அடிக்கடி போய்ப் பயிர்களை யழிப்பதுமுதலான பல தீமைகள் செய்துகொண்டு இருந்தன. அது கண்டு அவ்வூரார் அப்படி அவைகள் வந்து தொந்தரவு செய்யாதபடி அவைகளை யோட்டிவிடும்படி துப்பாக்கியைக் கொண்டுவந்து சுடத் தலைப்பட்டார்கள். அந்தத் துப்பாக்கிக் குண்டு ஒரு பெரிய யானையின் காலில் நன்றாய்ப் பட்டது. அது பிராணாபாயமான காயமேயானாலும், பிறகு அந்த யானை ஒரு மாதகாலம் பிழைத்திருந்தது. ஆனாலும் அது இருந்தவிடத்தைவிட்டு நகரச்சக்தியில்லாமல் அவ்விடத்திலேயே படுத்திருந்தது. அதனோடு கூடப் பழகிய குட்டியானை யொன்று தன் தோழனுக்கு நேரிட்ட துன்பத்தைக் கண்டு மிகவும் விசனம் அடைந்து, அதைவிட்டு அப்புறம்போகாமல் இரவும்பகலும் விடாமல் அதன் பக்கத்திலேயே அதற்கு வேண்டிய உபசாரஞ் செய்துகொண்டு இருந்தது. புண்பட்ட யானைக்கு இலை தழை முதலான உணவுகளும் தண்ணீரும் கொண்டுவந்து கொடுப்பதற்குமாத்திரம் எப்பொழுதாவது வெளியே போகும். தண்ணீர் பெரிய யானையின் தாகத்திற்கு மாத்திரமேயன்று. அதைக் குளிப்பாட்டி அதன் கால் புண்ணைக் கழுவிச் சுத்திசெய்யவும் தன் துதிக்கையில் தண்ணீர் கொண்டுவரும். இந்த விநோதத்தைப் பார்க்கும்படி அந்தக் கிராமத்தார் ஆராவது அருகே வருவார்களானால், குட்டியானை பெரிய கோஷஞ்செய்து அவர்களை அப்புறம் ஓடிப்போகும்படி செய்யும்.

இப்படியிருக்கப் பெரிய யானைக்குக் கால் அதிகமாக வீங்கி மரணவேதனை அதிகப்பட்டு ஆகாரமும் ஏற்றுக்கொள்ளக்கூடாமற் போயிற்று. அப்பொழுது குட்டியானை அதிகமான விசனமடைந்து மிகவும் மிருதுவான தளிர் தழை முதலியவற்றைக் கொண்டுவந்து தானே தனது துதிக்கையினால் பெரிய யானையின் வாயில் போட்டு ஊட்டத் தலைப்பட்டது. இவ்வளவு அன்பும், ஆதரவும், ஆலோசனையும் மனிதருக்குக்கூட உண்டோ இல்லையோவென்று நினைக்கும்படியாயிருந்தது. பெரிய யானை அந்த உணவுகளை உட்கொள்ளாமற்போனால், சிறிய குட்டியானை தனக்குள்ள விசனத்தை வெளியிட்டுப் பெருங்கூச்சலிட்டு, எப்படியாவது உணவை யேற்றுக்கொள்ளும்படியாக வேண்டிக்கொள்ளும். கடைசியாகப் பெரிய யானை இறந்துபோகும் தினத்தில் குட்டியானை அதை விட்டு ஒரு நிமிஷங்கூட அப்புறம் போகாமல் கண்ணீர் தாரைதாரையாகப் பெருக அதன் பக்கத்திலேயேயிருந்து தனது துதிக்கையால் அதன் கால்புண்ணை விசிறிக்கொண்டிருந்தது. அப்பால் பெரிய யானை இறந்துபோனதைக் கண்டு குட்டியானை அந்தத் துயரம் பொறுக்கமாட்டாமல் கதறி யழுதுகொண்டே அப்புறம் போய்விட்டது. மறுபடி அந்தப் பக்கம் திரும்பவேயில்லை. இறந்துபோன யானையின் தந்தம் ஆறடி நீளமும், அடியில் இரண்டடி சுற்றளவுமுள்ளனவா யிருந்தனவாம்.

தோட்டத்துப் பக்ஷிகளைப் பழக்குதல்.

பக்ஷிகளைப் பழக்கப் பலவழிகளுண்டு. ஆனாலும் பக்ஷிகளிடத்திலும் அவைகள் கூடிக் களித்து விளையாடும் தோட்டத்தினிடத்திலும் அபிமானமுள்ளவர்கள் ஆவலுடனே கேட்கத்தக்க இரண்டொரு சங்கதிகள் இங்கே சொல்லுவோம். பற

வைகளைப் பிடிப்பதற்கு முதன்மையான ஸாதனம் அவைகளுடைய பசியேயாம். மழைக்காலத்தில் பலவிதமான பக்ஷிகளும், உணவு கிடைக்காமல் பசியினல் வருந்தி நமது வீட்டு வாயில்களில் வந்து திரிகின்றன. பறவைகளைப் பிடித்துப் பழக்க வேண்டுமென்று ஆசைகொண்டவர்களுக்கு அதுவே ஏற்றதருணமாம். பக்ஷிகள் நமது வீட்டுக்கு அருகே வருவதுகண்டு நமது வாயிலில் நாம் பலவிதமான தானியமுதலான உணவுப் பொருள்களை இறைத்து வைத்தால், அவை அவ்விடத்திற்கு வந்து அவற்றைப் பொறுக்கித் தின்னும். அது பழக்கமாய்ப் போனபிறகு நாம் உட்காந்திருக்கு மிடத்திற்குப் பக்கத்திலேயே தானியங்களை இறைக்க வேண்டும். பக்ஷிகள் கொஞ்சம் பயந்தெளிந்து நமது பக்கத்தில் வந்து இரை பொறுக்கத் தலைப்படும். அதுகண்டு நாம் மெல்ல மெல்லக் கொஞ்சங் கொஞ்சமாய் நமது பக்கத்திற்குப் பக்ஷிகளை யழைப்பித்துக்கொள்ளலாம். பிறகு நாம் நமது கையிலேயே ஏதேனும் ஒரு உணவை வைத்துக்கொண்டு கையை நீட்டினல், நாம் மோசஞ்செய்ய மாட்டோமென்று தெரிந்து அந்தப் பறவை நமது கையிலுள்ள தீனியையே வந்து எடுத்துக்கொண்டு போகும். இதுவும் சிலநாள் பழக்கமாகிவிட்டால் பிறகு நாம் மடியில் ஆகாரம் வைத்துக்கொண்டிருந்தாலும் அவ்விடத்திற்கும் அந்தப் பக்ஷி அதிக தைரியமாக வந்து அவ்வுணவைத் தின்னத் தலைப்படும்.

இப்படிப் பழக்கப்பட்ட கிளி முதலான பக்ஷிகள் தம்மைப் பழக்கியவர்களுடைய பக்கத்தை விட்டு அப்புறம்போகாமல் எங்கேபோனலும் அவர்களோடுகூடவே போகப்பார்க்கிறோம். அவர்கள் கையில் வைத்திருக்கும் உணவுகளை மாத்திரமேயன்றி வாயில் வைத்துக்கொண்டிருக்கிற உணவுகளையும் எடுத்துத் தின்பது அநேகருக்குப் பிரத்தியக்ஷமாகத் தெரிந்திருக்கலாம். அப்படிப் பழகின பக்ஷிகள் நம்முடனே பேசவும் கற்றுக்கொண்டு பேசி நமக்கு விநோதத்தை விளைவிக்கின்றன. மனிதர் வாயில்வைத்திருக்கும் வெளுப்பான உணவுகளை யெடுத்துத் தின்னப் பழக்கப்பட்ட ஒரு பக்ஷி, தோட்டத்தில் ஒருவன் புறப்பட்டுப் போகையில் அவனுடைய பல் சற்று வெளேரென்று வெளியே தோற்றினதுகண்டு அது ஏதோ ஒரு உணவுதானென்று நினைத்து அதை யெடுக்க வந்ததென்று சொல்லிச் சந்தோஷப்பட்டிருக்கிறார். ஆகையால் பறவைகளைப் பிடித்து வளர்க்க விருப்பமுள்ளவர்கள் இவ்விதமாக அவைகளுக்கு ஆசை காட்டி அவற்றை வருத்தாமலே நம்மிடம் வரும்படி செய்தால், அவை தாமே நம்முடன் பழகி நமக்கு வேண்டிய விநோதத்தை விளைவிக்கும். அவற்றைத் துன்பப்படுத்திப் பிடிப்பது பாதகமாகும்.

வாயில்லா ஜந்துக்களின் நேசியாகிய ஒரு பெருமாட்டிக்கு 80-வது வயதில் செய்த ஸம்மானம்.

பிரான்ஸிஸ் பவர் காப் என்னும் பெருமாட்டியின் பரோபகார குணத்தையும், அவர் ஜீவகாருணிய விஷயமாய்ப்படும் பாடுகளையும்பற்றி நாம் முன் ஒரு ஸஞ்சிகையில் விளங்கக் கூறியிருக்கிறோமல்லவா? அவருக்கு நாளது டிசெம்பர்மீ த்துடன் 80-ம்வயது பிறந்ததாம். இந்தக்குளிர்காலத்தைப் போக்கும்படி அவர் இங்கிலாந்தில் கிளிப்ட்டன் என்னும் பட்டணம் போயிருந்தார். போன விடத்தில் அவருக்குப் பிறந்தநாள் வந்தது கண்டு, அங்கிருந்த அவரது நண்பர்களும், அவர் செய்த நற்செய்கைகளைக் கண்டு வியந்த மற்றும் பலரும் கூடிக் கையொப்பமிட்டு ஒரு சுபவசன பத்திரிகை யளித்தார்கள். அவர்கள் புகழ்ந்து கூறிய சுபவசனங்களை வெகு அழகாய் அமைத்த ஒரு குறிப்புப் புத்தகத்தின் முகபத்திரத்திலெழுதி, மற்றப் பத்திரங்களில் அவர் தாமே யெழுதிய 300 பத்திரிகைகளைச் சேர்த்து அளித்தார்கள். அவர்கள் புகழ்ந்து கொண்டாடிக் கூறியதை இதனடியில் அச்சிடுகிறோம்:—

"உமது நீடித்த வாழ்நாளில் லோகோபகாரத்தையே மேலாக வெண்ணி ஊக்கமது கைவிடாமல் நீர் பட்ட பாடுகளையும், மேலான தரும சிந்தையையே மனத்திற்கொண்டு நீர் காலக்ஷேபஞ் செய்துவந்ததையும் கண்டு வியந்த நாங்கள் எங்களுக்கு உம்மிடமுண்டாகிய உண்மையான நன்குமதிப்பை வெளியிடும்பொருட்டு உமது 80-வது பிறந்தநாளான இன்றையதினம் ஒரு சுபவசன பத்திரிகை யளிக்க ஆவல்கொள்ளுகிறோம்.

வித்தியாசாலைகளில் படித்துப் பட்டப்பெயர் பெறும் உரிமை பெண்களுக்கு முண்டென்பதை முதல் முதல் உலகத்தாருக்கு எடுத்துத் தெரிவித்தவர் நீர்; கல்விப்பயிற்சியிலும் மற்றும் பல விஷயங்களிலும் ஸ்திரீகளைப் புருஷர்களோடொப்ப நடத்தவேண்டுமென்று பிரயாசைப்பட்டு அந்த விஷயத்தில் விசேஷமான அபிவிருத்தி யுண்டாகும்படி செய்தது உமது அபூர்வமான எழுதுகோல்; தேசத்தைச் சீர்திருத்த வெண்ணி ஏழைப் பிள்ளைகள் பள்ளிக்கூடங்களிலும், தொழிற்சாலைகளிலும் நீர் செய்த நன்மைகள் மிக வியக்கத்தக்கவை; மதாசார விஷயங்களிலும் நீதிவிஷயங்களிலும் ஜீவகாருணியங்களிலும் உலகத்தாருக்காக நீர் பட்டபாடு இவ்வள வவ்வளவென்று எடுத்துச் சொல்ல எம்மாலாகாது.

மேலும் நம்முடனே வாழும் வாயில்லா ஜந்துக்களுடைய உரிமைகளும் அவைகள் விஷயத்தில் நாம் செய்யவேண்டிய கடமைகளும் இப்படிப் பட்டவை யென்று தெரியாமல் அஞ்ஞானாந்தகா

ரத்தில் மூழ்கியிருந்த நம்மவருக்குத் தத்தங் குற்றம் குறைகளைத் தெரிந்துகொள்ளும்படி அறிவுவிளக் கேற்றி, வாயில்லா ஜந்துக்களின் உரிமைகளும், அவற்றிற்கு நாம் செய்யவேண்டிய கடமைகளும் இவை யிவையென்று உறுதியா யெடுத்துக்காட்டி யவர் நீரே யன்றோ? அந்நன்மைகளுக்காக உமக்கு வந்தனமளிக்கும் திறமை வாயில்லா ஜந்துவுக் கில்லையென்றாலும், அது எமக்கு உண்டல்லவா? இவ்வளவுகாலம் லோகோபகாரமாக நீர் செய்த பெரிய காரியங்களுக்கு இது ஒருவிதமான கைம் மாறாகுமெனக் கருதி, யாங்கள் இத்தருணத்தில் அவைகளை நன்கு மதித்துக் கொண்டாடுகின் றோம்.'' என்றிவ்விதமாக எழுதிப் படித்தார்கள். அநேகம் பண்டிதர்களும் பிரபுக்களும் பெருமாட் டிகளும் கையொப்பமிட்டு, அதனோடு சேர்ந்த மிகவும் அழகாகக் கட்டிய குறிப்புப் புத்தகம் பவர் காப் பெருமாட்டிக்கு நன்கொடையாய் அளிக்கப்பட்டது.

இந்தப் பவர் காப் பெருமாட்டி நாற்பது வரு ஷங்களுக்கு முன்னமே பிரிஸ்தல் நகரத்து ஏழை ஜனங்களுக்காக மிகவும் அதிகமாய்ப் பாடுபட் டார். அக்காலத்தில் அவருக்குத் துணையாக மேரி கார்ப்பெண்ட்டர் என்னும் பெருமாட்டியும் கூடி னார். ஸ்திரீகளை விருத்திக்குக் கொண்டுவரவேண் டுமென்பதே வாழ்நாள் முழுமையும் இவரது முதன்மையான நோக்கமாகையால், ஸ்திரீகள் தே கப்பயிற்சி செய்து திடகாத்திரமுள்ளவராகவேண் டுமென்று அதுவிஷயத்தில் அதிகமான ஆவல் கொண்டார். மேலும், புத்தகக் கடைகளிலே போய் விசாரித்தபோது ஸ்திரீகள் அநேகமாகக் கட்டுக்கதைப் புஸ்தகங்களையே வாங்கிப் படிக்கி றார்களென்று நன்றாய்த் தெரியவரவே, ஸ்திரீ களுக்கு மேலான வித்தியாப்பியாசஞ் செய்விக்க வேண்டுமென்று விரும்பியவர்க்கு இதைக் கேட் டால் மிகுந்த துக்கமுண்டாகுமல்லவா? இது விஷயத்தில் அவர் கொண்ட முயற்சியின் பெரு மையைப்பற்றி ஒரு கவி சொல்வதாவது: 'காப் பெருமாட்டி ஸ்திரீகளுக்கு மேலான கல்வி கற் பிக்கவேண்டுமென்ற விஷயத்தை வெளியிட்ட வுடனே லண்டன் நகரத்துப் பத்திராதிபதிகள் பலரும் அவருடைய அபிப்பிராயத்தைப்பற்றி இகழ்ந்து பேசலானார்கள். ஆனாலும் காப் பெருமாட்டி தாம் கொண்ட கருத்தை யச்சிட் டுப் பத்திரமாகத் தம்மிடத்திலேயே வைத்துக்கொ ண்டிருந்தார். அப்பால் 17 வருஷங்களுக்குப் பிறகு லண்டன் ஸகலகலாசாலை ஸ்திரீகளுக்குக் கல்வித் தேர்ச்சியைப்பற்றிப் பட்டப்பெயர் அளித் தபோது, அவ்விடஞ் சென்றிருந்த இப்பெரு மாட்டி அச்சபையில் அந்தக் கடிதத்தை யெடுத்துக் காட்டினார்' என்பதாம்.

ஜீவ மிருகாங்கச் சேதனத்தைப்பற்றி இவர் சிறு பிராயத்திலேயே கூடாதென்று தடுக்க முயன்ற வர். 'ஜீவ மிருகாங்கச் சேதன கண்டன சபை' என்று ஒரு சங்கம் விக்ட்டோரியா வீதியிலே ஸ்தா பித்து, அதற்கு 13 வருஷகாலம் கவுரவ காரியதரிசி யாயிருந்து, 1897-ம் வருஷ முதல் அதேவிஷயமான மற்றொரு சங்கத்திற்கு அக்கிராஸனாதிபதியாயிருக் கிறார். இந்த விஷயத்தைப்பற்றி இவர் அநேகம் ஸஞ்சிகைகளெழுதிப் பிரசுரஞ்செய்தார். அவை விசேஷமா யெவ்விடத்திலும் பரவின. இதர மான மற்றும் பல விஷயங்களைப்பற்றியும் இவர் அநேகம் ஸஞ்சிகைகள் எழுதியிருக்கிறார். எப் பொழுதும் ஓயாமல் விடாமுயற்சியாகப் பாடுபடு வதற்கு இந்த மிஸ். காப் பெருமாட்டியே பிர தானமான நிதர்சனமாயிருக்கின்றார். இவ்வளவு தள்ளாத வயதிலும் இவர் அம்முயற்சியைக் கை விடாமலே யிருக்கிறார். லோகோபகாரமாகப் பாடு படுவதே இவருக்கு ஒரு பெரிய விநோதமாயிருக் கிறதுபோலும். புன்னகையுடன் கூடிய இவர் முகப்படத்தை இச்சஞ்சிகை முதலில் காண்க.

இந்தியாவிலே பறவைகளைக் கொல்லாமல் காத்தல்.

வாயில்லா ஜந்துக்களிடத்தில் அன்புள்ளவர் கள் எல்லாரும் ஆநந்தப்படும்படியான ஸங்கதி யொன்றை இந்தியா துரைத்தனத்தார் இப்பொ ழுது பிரசுரஞ்செய்திருக்கிறார்கள். அதென்னவெ ன்றால், பிரிட்டிஷ் ராஜ்யமான இந்தியாவிற்குள் கடல்களிலாகட்டும் காடுகளிலாகட்டும், பக்ஷிகளு டைய சிறகுகளையும் தோல்களையும் பிச்சி இம் சிப்பது கூடாதென்று பிரசித்தப்படுத்தியிருக்கிறார் கள். ஆனால், நீர்க்குருவிகளின் சிறகுகளை மாத் திரம் அலங்காரத்திற்காக எடுத்துக்கொள்ளலா மென்றும், பிரகிருதி தத்துவ சாஸ்திர விஷயமான பரிசோதனை செய்யவேண்டுமானால் அப்படிப் பட்ட நல்லெண்ண முடையவர்கள் சில பக்ஷி களின் தோல்களையும் எடுத்துப் பரிசோதிக்கலா மென்றும் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். பக்ஷி ரக்ஷண விஷயமாக நேர்வழியில் செல்ல இது முதல்படியல்லவா? தாங்கள் வெகுநாளாய் வேண் டிக்கொண்டிருந்த இவ்விஷயத்தை இப்பொழுது இப்படி துரைத்தனத்தார் மேற்போட்டுக்கொண்ட தற்காக, பக்ஷி ரக்ஷண சங்கத்தார் மிகவும் நன்றி பாராட்ட வேண்டுமன்றோ?

இப்பொழுது இங்கிலாந்தில் இதற்கு அனுகூல மான அநேகம் நல்ல காரியங்கள் செய்யப்பட்டு வருகின்றன. பக்ஷிகளின் சிறகுகளை அழகுக் காகத் தம்முடிகளில் தரித்து வந்தவர்கள் அநேகர் இப்பொழுது அந்தக் கெட்ட வழக்கத்தைக் கை விடலானார்கள்; போர்வீரர்கள் ஒரே விதமான படைக்கோலம் கொள்வதற்காக இதுவரையில் ஒரு வகைப் பக்ஷி இறகைத் தரித்து வந்ததை இனிக்

கூடாதென்று விலக்கிவிட்டார்கள். இப்படியே பற்பல விதமான பக்ஷிகளைச் சிறகுகளைப் பிச்சியும், கால்களை யொடித்தும், கண்களைக் குத்தியும் பலவிதமாகத் துன்பப்படுத்தி உணவுக்காகக் கடை வீதியில் கொண்டுபோய் விற்கிற கொடிய வழக்கமும் சீக்கிரமே யொழியவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறோம். இப்படிப் பக்ஷிகளைப் பல காரியங்களுக்காகப் பிடித்துக் கொல்லுவதனால், அநேக விடங்களில் சில பக்ஷிகள் அடியோடு ஒழிந்து கண்ணால் காணவும் அருமையாகி விட்டன. ஆ! நமக்கு இன்பம் விளைவிக்கும்படி கடவுள் படைத்துத் தந்த பிராணிகளை இம்சித்துக் கொல்வது எவ்வளவு புத்தியீனமான காரியம்! இது விஷயத்திலும் துரைத்தனத்தார் கூடிய சீக்கிரமே கவனமுள்ளவர்களாக வேண்டுமென்று கோருகிறோம்.

குதிரைகளைப் பிடித்துப் பழக்குதல்.

மனிதர்களுக்கு எவ்விதமாகக் கல்வி கற்பிக்கலாமோ, அதே விதமாகவே குதிரைகளுக்கும் வெகு சுலபமாகக் கல்வி கற்பிக்கலாம். ஆனால் 'இளமையிற்கல்' என்றபடி மனிதர்களுக்குச் சிறு வயதிலேயே கல்வி கற்பிப்பது எப்படி அவசியமோ அப்படியே, குதிரைகளுக்கும் குட்டியாயிருக்கையிலே கல்வி கற்பிக்கத் தொடங்கவேண்டும். நாம் கற்பிக்கும் கல்வி அதற்கு நன்றாகத் தெரிகிற வரையில் மத்தியில் நிறுத்தாமல் தொடர்ச்சியாகவே பயிற்சி செய்வித்துக்கொண்டு வரவேண்டும். மனிதர்களி லெப்படியோ அப்படியே குதிரைகளிலும் அவைகளுடைய புத்தியின் ஏற்றக்குறைவுக்குத் தகுந்தபடி, நன்றாகக் கற்றுத் தேர்ச்சிபெறுகிற நாள் ஏறவும் தாழவுமிருக்கும்; பழக்கும் வழிகள் மாத்திரம் எல்லாவற்றிற்கும் ஒரே விதந்தான். அவைகளுக்கு நன்றாய்க் கற்பிப்பதற்கு நல்ல திறமையுடையவனான குதிரைக்காரன் வேண்டும். அவனுக்கு அதிகமான தைரியமும் பொறுமையும் விடாமுயற்சியும் வேண்டும்.

பூனைக்குட்டி.

ஒரு வீட்டிற்கு வரப்போக விருந்த பெருமாட்டி அந்த வீட்டிலிருந்த ஒரு சிறு பெண்ணினது யோகக்ஷேமத்தை விசாரித்து, அதைப்பார்த்து: "நீ பூனைக்குட்டி ஒன்றை வளர்த்து விளையாடிக் கொண்டிருந்தது எங்கே காணோம்" என்று கேட்டாள்.

பெண். "என்ன கேட்கிறீர்? உமக்குத் தெரியாதா" என்றது.

பெரு. "எனக்குத் தெரியாதே! குளத்தில் விழுந்து முழுகிப்போயிற்றோ."

பெண். "அப்படிப் போகவில்லை."

பெரு. "கையிழந்து காணாமல் போயிற்றோ."

பெண். "அப்படிக்கில்லை."

பெரு. "ஒரு வில் வண்டியின் கீழ் அகப்பட்டு மாண்டதோ."

பெண். "இல்லை, இல்லை."

பெரு. "யாராவது மருந்திட்டார்களா?"

பெண். "இடமில்லை."

பெரு. "இல்லாவிட்டால் அதன் கதியென்னமோ" வென்று கேட்க,

பெண். "அது பெரிய பூனையாக வளர்ந்துவிட்டதே" என்று சொல்லவே, அந்தப் பெருமாட்டியும் மற்றவர்களும் கேட்டுப் புன்சிரிப்பு சிரித்தார்கள்.

சாலையில் உலாவுகிறவர்களுக்குத் தோழனும், பிச்சையெடுக்கும் அந்தகனுக்கு வழிகாட்டியுமான நாய்.

நாய்களுடைய நற்குணங்களைப்பற்றிப் பல விதமான கதைகள் வழங்குகின்றன. அந்த நற்குணங்களில், மனிதர்களுக்குத் தோழனும், கண்ணில்லாத குருடர்களுக்கு வழிகாட்டியுமாயிருப்பது சில நாய்களிடத்தில் மிகச் சிறந்தகுணமாம். தனிப்புறமாயிருந்து காலங்கழிக்க விருப்பமுடையவர்களுக்குப் பொழுதுபோக்கான நல்ல துணை ஒரு நாயும் கைத்தடியுமிருந்தால் போதுமானவை யென்று ஒரு புலவர் கூறியிருக்கிறார். அப்படிப் பட்ட நாய்கள் ஐரோப்பாவிலே ஸ்காத்லாந்து முதலான தேசங்களில் மிகவிசேஷம். அத்தன்மையான ஒரு நாயும், கையி லொரு சிறுதடியும் சித்தமாயிருக்குமானால், எவ்வளவு தூரம் வழிநடந்து போகவேண்டுமானாலும், வழிநடப்பதனாலுண்டாகும் வருத்தம் சிறிதும் தோன்றாமலே வெகு சுலபமாக நடந்து செல்லலாமென்று ஒருவர் உரைத்திருக்கிறார். அப்படி வழிநடந்து போகையில், அந்த நாய்கள் வாஸனையைப் பற்றிக்கொண்டு பாதைக்கு இருபக்கங்களிலுமுள்ள வேலிகளிலும் பள்ளங்களிலும் தாவிப்போய், அங்கே வாஸஞ் செய்துகொண்டு பற்பல விதமான தீமைவிளைவிக்கும் எலி பெருச்சாளி முதலானவைகளைப் பிடித்து வேட்டையாடி யஜமானனுக்கு அதிகமான ஆநந்தம் விளைவித்துக்கொண்டே போகும். இப்படிப்பட்ட நாய்களில் அநேகவிதமுண்டு. அவை நாநாவிதமான நிறமுடையவை. அந்த நாய்களிடமுள்ள இப்படிப்பட்ட நல்ல குணங்களை நன்றாய்க் கண்டறிந்து வடதேசத்தார் எப்பொழுதும் அவைகளை விட்டுப்பிரியாமல் கூடவே வைத்திருக்கிறார்கள். அந்த நாய்கள் தங்கள் யஜமானனிடத்தில் வேறெந்த துஷ்டமிருகமாயினும், துஷ்ட

மனிதர்களாயினும், கள்ளர் கொலைபாதகர்களாயினும், விஷப்பூச்சிகளாயினும் ஒன்றும் வரப் பார்த்துக்கொண்டிருக்கமாட்டா. அபாயம் நேரிட்டபோது தம் யஜமானனது பிராணனைப் பாதுகாக்கத் தமது பிராணனையும் கொடுக்கத்துணியும்.

பலவிடங்களில் நாய்கள் தங்கள் போஷகர்களான ஏழை அந்தகர்களை வீதிகளில் வழிகாட்டி நடத்திக்கொண்டு போவதைப் பார்க்க வெகு அதிசயமாயிருக்கும். நாய்கள் மனிதர்களுக்கு இப்படி மகோபகாரஞ் செய்வதைப்பற்றி ஒரு கவிராயர் புகழ்ந்து பேசியிருக்கிறார். அதாவது, ஆ! அதோ அந்த நாய் ஜனங்கள் அடர்ந்து கூட்டமாயிருக்கும் அந்தவழியிலே அந்தக் குருடனை அவன் வழக்கமாய்ப் போகுமிடத்திற்கு எவ்வளவு மெதுவாகவும் ஜாக்கிரதையாகவும் அழைத்துக்கொண்டு போகின்றது பாருங்கள்; அந்தக் குருடன் அங்குள்ள தயாளகுணமுடையவர் பலரிடத்தும் கைநீட்டி இரந்து பிச்சை கேட்டுக்கொண்டு போகிறான்; நாயோ, தன்னையே பெருந்துணையாக நம்பியிருக்கிற யஜமானனைக் கொஞ்சமும் பிசகாதபடி சரியான வழியிலேயே செலுத்திக்கொண்டு போகின்றது; அந்த யஜமானனுக்கு உண்டாயிருக்கிற சங்கடங்களெல்லாம் தனக்கே உண்டானவைபோல எண்ணி அவனிடத்தில் அதிகமான கருத்து உடையதாகி அது அவனை மெல்ல மெல்ல வழிநடத்திக்கொண்டு போகிறது. இரக்கமுள்ள உதாரபுருஷர்கள் அவனுக்குப் பிச்சை போடுவார்களானால், தான் பசியினால் எவ்வளவு அதிகமாகக் களைத்து வருத்தமடைந்திருந்தாலும், அதில் அணுவளவும் தான் தின்னப் பிரியப்படுவதில்லை. நடுவழியில் கள்ளர்கள் எவரேனும் வரக்கண்டால், அதைக் குருடனான தன் யஜமானனுக்குத் தெரிவித்து வேண்டிய ஜாக்கிரதைசெய்து அவனைக் காப்பாற்றி வந்தது. இப்படி அந்த நல்ல நாய் அந்தக் குருடனை அவனது வாழ்நாளில் நன்றாய்க் காப்பாற்றிவந்ததுமன்றி, அவனிறந்த பிறகுகூட அவன் முன்னால் கையில் வைத்துக்கொண்டு பிச்சையெடுத்த சப்பளாயைத் தன்வாயில் கவ்விக்கொண்டு, ஜனங்கள் நெருக்கமாயிருக்கும் வீதிகளில்போய் அங்கே வேலையாகப் போய்வந்து கொண்டிருக்கும் இரக்கமுள்ள ஜனங்களின் முகங்களை நிமிர்ந்து பார்த்து, தனக்குப் பிச்சை போடும்படி வேண்டிக் கேட்பதுபோல் வாலையாட்டிக்கொண்டு சென்றது. யஜமானனிறந்தபிறகும் இப்படிப் பிச்சையெடுத்து அவனுடைய குடும்பத்தைக் காப்பாற்றிய இந்த நாயின் நடத்தையினால் 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்கிற நீதி யாவருக்கும் நன்றாகப் புலப்படுகிறது. இப்படி நன்றி மறவாத நற்குணமுள்ள நாய்களிடத்தில் நாம் அன்பு பாராட்டிப் பாதுகாப்பது நமக்கு முக்கியமான கடமையன்றோ?

புது வருஷத்துக் கொண்டாட்டம்.

பழைய வருஷம் இனிதாகச் சென்று புது வருஷம் ஆரம்பமாகிற இத்தருணத்தில் நாம், இப்பத்திரிகைக்குப் பிரதிப் பிரயோஜனத்தை எதிர்பாராமல் பற்பல விஷயங்களையும் எழுதிவருகிற நமது நண்பர்கள் விஷயத்தில் நமக்குள்ள நன்றியையும் நன்குமதிப்பையும் விருப்புடனே வெளியிடுகின்றோம். இத்தருணத்தில் நாம் மாமிசபோஜனம் செய்யும் மனிதர்கள் எல்லாருக்கும் நுட்பமான ஒரு சங்கதி அறிவிக்கக் கருதுகிறோம். நாம் நமது பெண்சாதி பிள்ளைகளுடனே கூடிக் களித்துச் சந்தோஷமாயிருக்கிற பண்டிகைநாளில் பல்லாயிரம் பிராணிகளை வதைத்தோ நமது வயிற்றை நிரப்புவது! அன்றையதினம் ஆடுமாடு அடிக்கும் தொட்டியிற் போய்ப்பார்த்தால் எவர்க்காயினும் அணுவளவாவது சந்தோஷமுண்டாகுமோ? தீபாவலி பண்டிகை யென்று பெயரிட்டு இத்தேசத்தில் செய்கிற ஜீவவதைக்கு அளவு உண்டோ? உங்கள் வீட்டில் உள்ளவர்களுடைய உயிர்போலவே யன்றோ அந்தப் பிராணிகளின் உயிர்? அத்தனைப் பிராணிகள் சீவனை யிழக்கும்போது பண்டிகை கொண்டாடுவது பெரிய பேதமையன்றோ? 'ஆகையால் பூனைக்குக் கொண்டாட்டம் எலிக்குத் திண்டாட்டம்' என்பதைத் தெரிந்து, இந்தக் கெட்ட வழக்கத்தை இனியாவது யாவரும் கைவிடுவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

இரக்கமில்லாதவன் நெஞ்சு இரும்பிலும் கொடியதாகையால் இதன் கீழ்வரும் பாட்டின் கருத்தைச் சற்று நினைப்பாராக.

ஜீ வ கா ரு ணி ய ம்.

கழிநெடில் விருத்தம்.

சீர்கொண்ட பூவுலகி லுள்ளவென் நண்பரே
திகழுமெவ் வருடத்திலுஞ்
சேர்பொங்கல் வருடப் பிறப்புதீ பாவளி
சிறந்தவிச் சுபதினத்தில்
ஏர்கொண்ட நல்லுடுப் போடுவணி யும்மணிந்
தின்புறு முணவருந்தி
ஏகமா யாவரும் மகிழ்வோ டிருப்பதற்
கேற்றவவ் வமயந்தனில்
சார்வுண்ட நமதுவீட் டினிலிறைந் துள்ளநற்
சாதமுத லியாவுமுண்டு
சஞ்சரித் திடுகின்ற கோழியுள் ளான்காடை
சாந்தமா டாடுகளெலாம்
நேர்கொண்ட வைந்தறி விருக்குமுயிர் நம்போல
நீடுசந் தோடமோடு
நிற்கின்ற விவைகளை யறுத்திடி லழுமீது
நேர்மையோ நந்தமக்கே.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1903.